THE TIMES OF INDIA
சமயம்

# தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு : சிபிஐ விசாரணை நடக்குது - விளக்கம் அளித்த தமிழக அரசு

Authored By எழிலரசன்.டி | Samayam Tamil | Updated: 21 Feb 2024, 11:31 pm

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக 2018ம் ஆண்டு நடந்த போராட்டத்தின் போது போலீஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 13 பேர் வரை கொல்லப்பட்டனர். 100க்கும் அதிகமானோர் படுகாயம் அடைந்தனர். இதனையடுத்து, ஸ்டெர்லைட் ஆலையை மூட தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது.

தமிழகத்தையே உலுக்கிய தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு விவகாரம் தொடர்பாக அருணா ஜெகதீசன் ஆணையம் விசாரித்து காவல் அதிகாரிகள், வருவாய் அதிகாரிகள் உள்பட பலரின் மீது குற்றவியல் மற்றும் துறை ரீதியிலான நடவடிக்கை எடுக்க பரிந்துரை செய்தது. இதுதொடர்பாக சிபிஐ தனியாக விசாரணை மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே துப்பாக்கிச் சூடு சம்பவத்தில் தொடர்புடைய காவல் துறை, வருவாய் துறை அதிகாரிகள் மீது கொலை வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனவும், பலியானோர் குடும்பங்களுக்கு தலா ஒரு கோடி ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என்றும் துப்பாக்கிச் சூட்டில் பலியான ஸ்னோலினின் தாய் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

மேலும், அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மட்டும் எடுக்கும் வகையில் தமிழக அரசு 2022ஆம் ஆண்டு பிறப்பித்த அரசாணைக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் மனுவில் கோரிக்கை வைத்திருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி சஞ்சய் கங்கா பூர்வாலா, நீதிபதி பரத சக்கரவர்த்தி அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "தமிழ்நாடு அரசு சார்பில் ஏற்கனவே இவ்வழக்கில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் வைக்கப்பட்டுள்ள அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்பட்டு உள்ளன. துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவு செய்யப்பட்டு சிபிஐ மேல் விசாரணை நடத்தி வருகிறது" என்று தெரிவித்தார்.

தமிழக அரசின் மனுவுக்கு பதில் அளிக்க மனுதாரர் தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. இதனை ஏற்ற தலைமை நீதிபதி அமர்வு, வழக்கை வரும் ஏப்ரல் 5ஆம் தேதிக்கு தள்ளிவைத்தது.**இதனிடையே துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்ததை தேசிய மனித உரிமைகள் ஆணையம் முடித்து வைத்ததை எதிர்த்து சமூக ஆர்வலர் ஹென்றி திபேன் தாக்கல் செய்த வழக்கும் இன்று நீதிபதிகள் எஸ்.எஸ்.சுந்தர், செந்தில்குமார் அமர்வில் விசாரணைக்கு வந்தது.**

**வழக்கில் அருணா ஜெகதீசன் ஆணையில் சுட்டிக்காட்டி இருப்பவர்களை எதிர்மனுதாரர்களாக சேர்த்து புதிய மனு தாக்கல் செய்யப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள்.எதிர்மனுதாரர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை நான்கு வாரங்களுக்கு தள்ளிவைத்தனர்**

https://tamil.samayam.com/latest-news/state-news/thoothukudi-gun-shoot-case-cbi-enquiry-undergoing-tn-govt-explain-to-high-court/articleshow/107891543.cms